2026.11.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

01. 2027 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள விதந்துரைகள்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கமைய தாபிக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்குத் தேவையான வளங்கள் தொடர்பாகவும் மற்றும் மாகாண சபைகளுக்கு தேசிய பாதீட்டில் ஒதுக்கப்படும் கொடைகளை ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் ஒதுக்கி வழங்குவதில் கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாடுகள் தொடர்பான விதந்துரைகள் அரசியலமைப்பின் 154 ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய நிதி ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் 2027 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பாதீட்டில் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியை, மாகாணங்களுக்கிடையில் பகிரப்படும் போது கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் தொடர்பாகவும் மற்றும் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயதானங்களுக்கு ஏற்புடைய வகையிலான சேவைகளை மிகவும் வினைத்திறனாக வழங்குவதற்குத் தேவையான அரச தலையீடுகள் தொடர்பாக நிதி ஆணைக்குழு தனது விதந்துரைகளை ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பித்துள்ளது. குறித்த விதப்புரைகளை அமுல்படுத்துவதற்கும், அரசியலமைப்பின் 154ண உறுப்புரையின் (07) ஆவது உப உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02. இலங்கையின் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் தென் இலினோய் பல்கலைக்கழகத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்

கற்கை நடவடிக்கைகளில் சிறப்புத் தேர்ச்சியை அடைதல், அறிவு விருத்தி மற்றும் விரிவாக்கம் செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு இரு நாடுகளுக்கிடையில் நிலவுகின்ற நட்பு ரீதியான தொடர்புகளை மேலும் விருத்தி செய்யும் நோக்கில், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் தென் இலினோய் பல்கலைக்கழகத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஆய்வுகள், விரிவுரைகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கான விரிவுரையாளர்களைப் பரிமாற்றம் செய்வதன் மூலம் சர்வதேச அனுபவங்களை அதிகரித்தல், கற்றல், ஆய்வுகள் மற்றும் சேவைக்கால பயிற்சிகளுக்கான பட்டப்படிப்புகள் மற்றும் பட்டப்பின்படிப்பு மாணவர்கள் பரிமாற்றங்களை ஊக்குவித்தல், ஒருங்கிணைந்த பயிலமர்வுகள், சம்ளேனங்கள் மற்றும் மாநாடுகளை ஏற்பாடு செய்தல் மற்றும் தகவல் பரிமாற்றங்களுக்கு வசதிப்படுத்துவதற்காக இவ்விரண்டு பல்கலைக்கழகங்களின் இணையத்தளங்களைத் தொடர்புபடுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஒத்துழைப்புடன் செயலாற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, கையொப்பமிட்ட திகதி தொடக்கம் ஐந்து (05) ஆண்டு காலம் வலுவிலுள்ள வகையில், இலங்கையின் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் தென் இலினோய் பல்கலைக்கழகத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கும் இடையிலான உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

163, கிருலபன மாவத, கொළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
தொ T - (+94 11) 2515759
பெ F - (+94 11) 2514753
மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

03. 1990 சுகப்படுத்தல் தேசிய அவசர நோயாளர் காவுவண்டிச் சேவைக்காக 100 புதிய நோயாளர் காவுவண்டிகளை விநியோகித்தல் தொடர்பான இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்

இந்திய அரசின் நிதிக்கொடையைப் பயன்படுத்தி 2016 ஆம் ஆண்டில் 1990 சுகப்படுத்தல் தேசிய அவசர நோயாளர் காவுவண்டிச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சேவை 2018 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம், அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் 24 மணித்தியாலய இலவச சேவை வழங்கப்படுவதுடன், நாளொன்றுக்கு 1,000 – 1,200 நோயாளர்கள் முதலுதவியளித்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர். இந்நோயாளர் காவுவண்டிகள் ஆண்டொன்றுக்கு 09 மில்லியன் கிலோமீற்றர்கள் பயண ஓட்டத்தில் ஈடுபடுவதால், தற்போதுள்ள நோயாளர் காவுவண்டித் தொகுதியில் 322 வண்டிகள் இயந்திரக் கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. இலங்கை அரசால் முன்வைக்கப்பட்ட விசேட வேண்டுகோளைக் கருத்தில் கொண்டு, 1990 சுகப்படுத்தல் சேவைக்குப் பயன்படுத்துவதற்கு முழுமையான மருத்துவ வசதிகளுடன் கூடிய 100 புதிய நோயாளர் காவுவண்டிகளை விநியோகிப்பதற்கு இயலுமாகும் வகையில் நிதிக்கொடையை வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, குறித்த நிதிக்கொடையைப் பெற்றுக் கொள்வதற்கு இந்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

04. விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத் துறையில் ஆய்வு ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜ் மேசன் பல்கலைக்கழகம் மற்றும் புதிய தொழிநுட்பம் தொடர்பான ஆதர். சீ. க்ளாக் நிறுவனத்திற்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளல்

ஆய்வு சவால்களை அடையாளங் காணல் மற்றும் தொழிநுட்ப தீர்வுகளை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட இருதரப்பினர்களுக்கிடையிலான பரஸ்பர ரீதியான பெறுபேறுகளுடன் கூடிய ஆய்வு ஒத்துழைப்புக்களுக்கான வசதியளிக்கும் நோக்கில், ஜோர்ஜ் மேசன் பல்கலைக்கழகம் மற்றும் புதிய தொழிநுட்பம் தொடர்பான ஆதர். சீ. க்ளாக் நிறுவனத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. ஐந்தாண்டு (05) காலப்பகுதிக்கு வலுவிலுள்ள இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இருதரப்பினரும் இணையவழிப் பாதுகாப்பு, ஆளில்லா விமானங்கள், விண்வெளி மற்றும் செயற்கைக் கோள்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர முறையிலான கற்றல்கள் மற்றும் 5G தொடர்பாடல் போன்ற துறைகளில் ஒத்துழைப்புடன் செயலாற்றுவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஜோர்ஜ் மேசன் பல்கலைக்கழகம் மற்றும் புதிய தொழிநுட்பம் தொடர்பான ஆதர். சீ. க்ளாக் நிறுவனத்திற்கும் இடையிலான உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05. 'க்ளீன் ஸ்ரீலங்கா – தூய நகரம்' திண்மக்கழிவு முகாமைத்துவ தேசிய கருத்திட்டத்தின் ஒரு கூறாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து 'வீட்டுமட்ட கூட்டுப்பசளை தயாரித்தல்' கருத்திட்டத்தை அமுல்படுத்தல்

இலங்கையில் நாளாந்தம் உருவாகின்ற திண்மக்கழிவுகளில் 50% - 60% சதவீதமானவை உயிர்ம இயற்கைப் பொருட்களுடன் கூடியதாக இருக்கின்றமையால், இக்கழிவுகளை வீட்டிலேயே கூட்டுப்பசளையாக மாற்றுவதன் மூலம் கழிவுகளைச் சேகரித்தல், ஏற்றிச் செல்லல், வேறுபிரித்தல், மீள்சுழற்சி செய்தல் மற்றும் இறுதியாக அகற்றுவதற்கான நிதிச் செலவுகள் மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகளைக் குறிப்பிடத்தக்களவு குறைத்துக் கொள்ள முடியுமென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதனால், கழிவுகள் தோன்றுவதிலிருந்து இறுதியாக அகற்றும் வரை பேண்தகு வகையிலான சுற்றாடல்

தீர்வாக 2027 – 2029 ஆண்டு காலப்பகுதியில் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள 'க்ளீன் ஸ்ரீலங்கா – தூய நகரம்' திண்மக் கழிவு முகாமைத்துவ தேசிய கருத்திட்டத்தின் கீழ், அதன் ஒரு கூறாக வீட்டுமட்டத்தில் உருவாகின்ற உக்கலடையும் கழிவுகளை கூட்டுப்பசளையாக மாற்றும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கியவாறு, குறித்த நிறுவனங்கள் தேர்ந்தெடுத்த வீதி பகுதிகளை இயற்கைக் கழிவுகளை சேகரித்தல் சேவைகளை வழங்காத வலயமாக மாற்றுவதற்காக அந்தந்த வீட்டலகுகளுக்கு வீட்டுமட்ட கூட்டுப்பசளை தயாரிக்கும் கூடைகளை வழங்கி, உக்கலடையும் கழிவுகளை வீடுகளிலேயே கூட்டுப்பசளையாக மாற்றும் செயன்முறை பேணிச் செல்லப்படும். கழிவுகளை கூட்டுப்பசளையாக மாற்றுவதற்குத் தேவையான பௌதீக வசதிகள் (கூட்டுப்பசளை தயாரிக்கும் கூடை), அறிவு மற்றும் தொழிநுட்ப வழிகாட்டல்கள், அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் கண்காணிப்பு மற்றும் வீட்டுமட்டத்தில் தொடர்ச்சியான பயன்பாடு போன்றவற்றை இச்செயன்முறையுடன் தொடர்புபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, 'க்ளீன் ஸ்ரீலங்கா – தூய நகரம்' திண்மக்கழிவு முகாமைத்துவ மூன்றாண்டு கருத்திட்டத்தின் ஒரு கருத்திட்டமாக மேல்மாகாணம் மற்றும் தென் மாகாணத்தை உள்ளடக்கியவாறு வீட்டுமட்ட கூட்டுப்பசளை தயாரிப்புக் கருத்திட்டத்தை முதலில் அமுல்படுத்துவதற்கும், அதன் வெற்றித்தன்மையின் அடிப்படையில் இக்கருத்திட்டத்தை ஏனைய மாகாணங்களுக்கும் விரிவாக்கம் செய்வதற்கும், கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

06. களனி பல்கலைக்கழகத்தின் வணிக மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் பத்துமாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்குதல்

பொருளாதார நெருக்கடி நிலைமையால் இடைநிறுத்தப்பட்டிருந்த களனி பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் பத்து மாடிக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய போட்டி விலைமுறிக்கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்களைக் கோரி வேலை ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக 2025.02.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 10 விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்டப் பெறுகைக் குழு மற்றும் பெறுகை மேன்முறையீட்டுச் சபை முன்வைத்துள்ள விதந்துரைகளைக் கருத்தில் கொண்டு, கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s Sathuta Builders (Pvt) Ltd இற்கு 1.73 பில்லியன் ரூபாய்கள் தொகைகக (பெறுமதி சேர் வரி நீங்கலாக) குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

07. நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளைப் பலம்வாய்ந்ததாகவும் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நிதிச் சூழலை கட்டியெழுப்பும் துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கான (உப வேலைத்திட்டம் 1) நிதியுதவிகளை வழங்குதல்

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான நிதி வசதிகள் வேலைத்திட்டத்திற்கு இணையாக இலங்கையின் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சிநிரல் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக 05 உப வேலைத்திட்டங்களின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 620 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொள்கை அடிப்படையிலான கடனைப் பெற்றுக் கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடன் பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கு 2026.03.16 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அங்கீகாரத்தின் பிரகாரம், இவ் உப வேலைத்திட்டத்தின் 1 ஆவது நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளைப் பலம்வாய்ந்ததாகவும் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நிதிச் சூழலை கட்டியெழுப்பும் துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை

அமுல்படுத்துவதற்குரிய கடன் தொகையைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் முறையான கடன் பேச்சுவார்த்தையை நிறைவு செய்துள்ளது. அதற்கமைய, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிரந்தர பொது மூலதன வளங்கள் மூலம் வழங்கப்படும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொள்கை அடிப்படையிலான கடன் கூறாகவும் மற்றும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி இடையீட்டுக் கடன் கூறாகவும் குறித்த கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

08. **தேசிய நெடுஞ்சாலைகளை விரிவாக்கம் செய்தல் மற்றும் வீதி உட்கட்டமைப்பு வசதிகளை மீள்கட்டமைத்தல்**

தேசிய நெடுஞ்சாலைகளை விரிவாக்கம் செய்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைத்திட்டம் மற்றும் தித்வா புயல் அனர்த்தத்தால் சேதமடைந்துள்ள வீதிகளைப் புனரமைப்புச் செய்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் வீதிப் பகுதிகள் சிலவற்றை மேம்படுத்துவதற்கான வேலை ஒப்பந்தக்காரர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேசிய போட்டி விலைமுறிக் கோரல் பொறிமுறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக கிடைக்கப்பெற்ற விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர் உயர்மட்ட பெறுகைக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில், கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரார்களுக்கு கீழ்க்காணும் வகையில் வேலை ஒப்பந்தங்களை வழங்குவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அ.ப.பா.)

அ) தேசிய நெடுஞ்சாலைகளை விரிவாக்கம் செய்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைத்திட்டம்

தொடர் இல	**வேலை ஒப்பந்தம்**	**கிடைக்கப் பெற்ற விலைமனுக்களின் எண்ணிக்கை**	**விதந்துரைக்கப்பட்ட விலைமனுதாரர்**	**ஒப்பந்தப் பெறுமதி (பெறுமதி சேர் வரி நீங்கலாக)**
01.	கொழும்பு - இரத்தினபுரி – வெல்லவாய – மட்டக்களப்பு வீதியின் (A004) கெட்டஹெத்த தொடக்கம் மொறகல வரையான (62+450 கிலோமீற்றர் தொடக்கம் 70+000 கிலோமீற்றர் வரை) வீதிப்பகுதியை விரிவாக்கம் செய்தல் மற்றும் மேம்படுத்தல்	05	M/s RR Construction (Pvt) Ltd	1,485.79 மில்லியன் ரூபாய்கள்
02.	பெல்மடுல்ல – எம்பிலிப்பிட்டி – நோனாகம வீதியின் (A018) மாதம்பே தொடக்கம் கொஸ்வெட்டிய வரையான (15+000 கிலோமீற்றர் தொடக்கம் 30+000 கிலோமீற்றர் வரை) வீதிப்பகுதியை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல்	04	M/s RR Construction (Pvt) Ltd	3,739.84 மில்லியன் ரூபாய்கள்
03.	பேராதனை – ஹல்ஒழுவ – கட்டுகஸ்தோட்டை வீதியின் (B365) ஹதபிம சந்தியிலிருந்து கட்டுகஸ்தோட்டை வரையான (3+000 கிலோமீற்றர் தொடக்கம் 10+040 கிலோமீற்றர் வரை) வீதிப்பகுதியை விரிவாக்கம் செய்தல் மற்றும் மேம்படுத்தல்	03	M/s MAGA Engineering (Pvt) Ltd	3,106.21 மில்லியன் ரூபாய்கள்

ஆ) தித்வா புயல் அனர்த்தத்தால் சேதமடைந்துள்ள வீதிப் பகுதிகளைப் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் வேலைத்திட்டம்

தொடர் இல	**வேலை ஒப்பந்தம்**	**கிடைக்கப் பெற்ற விலைமனுக்களின் எண்ணிக்கை**	**விதந்துரைக்கப்பட்ட விலைமனுதாரர்**	**ஒப்பந்தப் பெறுமதி (பெறுமதி சேர் வரி நீங்கலாக)**
01.	நாவலப்பிட்டி – தொலஸ்பாகே வீதியின் 0 கிலோமீற்றர் தொடக்கம் 10-கிலோமீற்றர் வரையான வீதிப்பகுதி, நாவலப்பிட்டி – கினிகத்தேன வீதியின் 0 கிலோமீற்றர் தொடக்கம் 6.840 கிலோமீற்றர் வரையான வீதிப்பகுதி மற்றும் திம்புல வீதியின் 0 கிலோமீற்றர் தொடக்கம் 10.500 வரையான வீதிப்பகுதியைப் புனரமைத்தல்	04	M/s ELS Construction (Pvt) Ltd	763.98 மில்லியன் ரூபாய்கள்

09. **மாத்தளை புகையிரத வீதியின் சரசவி உயன மற்றும் பேராதனைக்கும் இடையில் மகாவலி ஆற்றுக்குக் குறுக்காக புகையிரதப் பாலத்தை நிர்மாணித்தல்**

கண்டி மாநகர பிரதேசத்தை உள்ளடக்கியவாறு விரிவான நகரை அண்டிய புகையிரத வலையமைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான சாத்தியவளக் கற்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக்கருத்திட்டத்தின் விடயதானத்திற்கு பேராதனைக்குக் குறுக்கே கடுகன்னாவ தொடக்கம் கம்பளை வரையான பிரதான புகையிரத வீதியை இரட்டைப் பாதையாக மாற்றுதல் மற்றும் பேராதனை தொடக்கம் கட்டுகஸ்தோட்டை மாத்தளை புகையிரத வீதியை இரட்டைப் பாதையாக மாற்றுவதும் உள்ளடங்குகின்றது. திட்டமிடப்பட்டுள்ள இரட்டைப் புகையிரதப் பாதையை பூர்த்தி செய்தல், தற்போது நிலவுகின்ற ஒற்றைப் புகையிரதப் பாதையால் ஏற்பட்டுள்ள இயலளவுத் தடைகளை நீக்குதல் மற்றும் புகையிரத வலையமைப்பின் நம்பகத்தன்மை மற்றும் தொடர்புகளை அதிகரிப்பதற்கான இக்கருத்திட்டத்தின் கீழ் படிமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, தித்வா புயல் அனர்த்தத்தால் சேதமடைந்துள்ள புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான இந்தியாவின் கடன் உதவித் திட்டத்தின் மூலம் நிதியுதவியைப் பெற்றுக் கொண்டு மாத்தளை புகையிரதப் பாதையை தேசிய புகையிரத வலையமைப்புடன் ஒருங்கிணைப்பதற்கு இயலுமாகும் வகையில் சரசவி உயன மற்றும் பேராதனைக்கும் இடையில் மகாவலி ஆற்றுக்குக் குறுக்காக புகையிரதப் பாலத்தை நிர்மாணிப்பதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

10. 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் விலங்கு மருத்துவத் தொழிலர்கள் (அபகீர்த்தியான நடத்தை) ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்

இலங்கையின் விலங்கு மருத்துவர்கள் மற்றும் விலங்கு மருத்துவத் தொழிலர்களைப் பதிவு செய்வதற்கான சட்டரீதியான சட்டகமொன்றை தாபித்தல், அவர்களின் தொழில்சார் தகைமைகளை விதித்தல் மற்றும் விலங்கு மருத்துவத் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக இலங்கை விலங்கு மருத்துவப் பேரவையைத் தாபிக்கும் நோக்கில், 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விலங்கு மருத்துலவ் மற்றும் விலங்கு மருத்துவத் தொழிலர் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறித சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விலங்கு மருத்துவத் தொழிலுக்குரிய 'அபகீர்த்தியான நடத்தை' எனக கருதப்படும் தொழில் தகாத முறை நடத்தை, பதவியை முறைகேடாகப் பயன்படுத்துகின்ற ஏதேனும் செயல் அல்லது செய்யாமை போன்றவற்றை வரையறுத்தல், அவ்வாறான நடத்தைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக 'விசாரணை குழாமை' நியமிப்பதற்கான முறையை நிறுவுதல் மற்றும் குற்றவாளியாக இருப்பின் பதிவை தற்காலிகமாக இடைநிறுத்தல் மற்றும் செல்லுபடியற்றதாக்கல், எச்சரித்தல் போன்ற தண்டனைகளை விதிப்பதற்கான அதிகாரத்தை இலங்கை விலங்கு மருத்துவப் பேரவைக்கு வழங்கும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் 2026.01.05 ஆம் திகதிய 2470/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய, அவ்வாறு வெளியிடப்பட்டுள்ள '2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விலங்கு மருத்துவ மற்றும் விலங்கு மருத்துவ தொழிலர்கள் (அபகீர்த்தியான நடத்தை) ஒழுங்குவிதிகளை' பாராளுமன்ற அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.